Registered as a Newspaper




# உதயன்

சுடர் : 41
கதிர் : 148

வியாழக்கிழமை
23 ஏப்ரல் 2026

சித்திரை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50


## தமிழர் விரோத அரசாங்கமே தமிழ்க் கட்சிகளின் விருப்பம்

### இனவாதத்துக்கு இடமேயில்லை என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 23**

**தெற்கில் தமிழர் விரோத அரசொன்று இருக்க வேண்டும் என்பதையே, வடக்கில் தோல்வி அடைந்துள்ள தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன. நாம் அவ்வாறு செயற்படமாட்டோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

»11

உரும்பிராய் பகுதியில் சோகம்

## மோ.சைக்கிள் – பட்டா விபத்து; தந்தை, மகன் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் நேற்றுமுன்தினம் இரவு நேருக்குநேர் மோதி ஏற்பட்ட விபத்தில், தந்தையும் மகனும் பரிதாபகமாக உயிரிழந்தனர்.

»11

## வடக்கை வெப்பம் இன்னும் வாட்டும்!

வளிமண்டலத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23
வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இன்று வெப்பமான வானிலை நிலவும் என, வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்

»11

## குறிகாட்டுவான் இறங்குதுறையின் சீரமைப்புப் பணி நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் இறங்குதுறையின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் நேற்று ஆரம்பித்து வைக்

»11

## நெடுந்தீவுக்கு நீதிகோரி நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23
நெடுந்தீவில் தற்போது நிலவும் பல்வேறு குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தி, நாளை கவனவீர்ப்புப் போராட்டமும் பேரணியும் இடம்பெறவுள்ளது.
நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்திலிருந்து

»11

## தனியார் கடற்போக்குவரத்து நெடுந்தீவுக்கு நாளை ரத்து!

விரிவு பக்கம்:- 11

இராணுவம், பொலிஸ் இணைந்து

## பருத்தித்துறை நகரில் கண்காணிப்பு உச்சம்!

யாழ்ப்பாணம், ஏப். 23
பருத்தித்துறை நகர்ப்பகுதிகளில் இராணுவமும், பொலிஸாரும் இணைந்து விசேட கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து

»11

அத்துமீறிய மீன்பிடி

## இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

விரிவு பக்கம்:- 11

நான்குமுனைப் போட்டிக்குள்

## தமிழகத்தில் இன்று பேரவைத் தேர்தல்!

### ஈழத்திலும் பரவலாகத் தாக்கம்

சென்னை, ஏப். 23
பெரும் எதிர்பார்ப்புகள் மற்றும் பரபரப்புகளுக்கு மத்தியில், தமிழகத்தில் இன்று சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. நான்குமுனைப் போட்டி கொண்டதாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது.
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பரப்புரைப் பணி

»11

## சாலேயின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 23
உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர்

»11



முச்சந்தி முரளி

“அங்க நடக்கிற லெக்சனுக்கு இஞ்சதான் அமோகமா பிரசாரம் நடக்குது கண்டியளோ”

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அநுர அரசிலும் தீர்வில்லையா?

### வவுனியாவில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி, வவுனியாவில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஏற்பாட்டில், பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பங்குபற்றலில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
இலங்கையில் இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்களைப் போன்றே ஜனாதிபதி அநுரவின் அரசாங்கமும் காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

»11

## ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சிறையில்

### சொல்கிறார் சந்திரிகா



கொழும்பு, ஏப். 23
உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரி தற்போது சிறையில் உள்ளார் என்று, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.
நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4409 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 06 18 34 58 |
| விசேட எழுத்து | E |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1476 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 17 33 34 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0435 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 9 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2515 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 10 22 28 75 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6167 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 8 0 4 2 4 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2197 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 13 39 53 78 |
| விசேட எழுத்து | K |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0283 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 29 43 |

# மன்னாரில் அனுமதிக்கப்படாத உரம், கிருமிநாசினி விற்பனை!

## விவசாயிகளுக்கு எச்சரிக்கை

மன்னார், ஏப்.23

**மன்னார் மாவட்டத்தில் அனுமதிக்கப்படாத உரம் மற்றும் கிருமிநாசினிகள் மறைமுகமான முறையில் விற்பனை செய்யப்படுகின்றன.**

எனவே விவசாயிகள் கொள்வனவின்போது எச்சரிக்கையாக இருப்பதுடன், இதனைக் கட்டுப்படுத்த அதிகாரிகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிமுகப்படுத்தப்படாத உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளை விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியாது.

ஆனால் மன்னாரில், விற்பனை நிலையங்களில் ஆவணங்கள் பரிசோதனை செய்யப்படாது விற்பனை செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. விற்பனை அனுமதிக்காக பலரின் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, 18 பேருக்கே அனுமதி கிடைக்கப்பெற்றது என்றும், நிராகரிக்கப்பட்டவர்களின் 31 விண்ணப்பங்கள் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தொடர்புடைய அதிகாரி தெரிவித்தார்.

விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க அதிகாரிகளே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அதிகாரி, விற்பனை நிலையங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் சிலர் அனுமதியில்லாத உரம் மற்றும் கிருமிநாசினிகளை தங்களது வீடுகளில் மறைமுகமான இடங்களில் வைத்து விற்பனை செய்கின்றனர்-என்றார். (க-60)

**சுபிரி தன சம்பத** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0875 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 3 2 5 2 0 7 |

**Super Ball** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3141 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 03 06 46 67 |

**சனிதா** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 19 34 58 71 |
| வெற்றி வாரம் | 5302 |

**SASIRI** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0971 |
| வெற்றி இலக்கம் | 14 21 32 |

**லக்ன ராசி** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ராசி | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 05 13 30 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4853 |

**KAPRUKA** DLB

| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 30 |
| வெற்றி இலக்கம் | 56 61 67 72 |
| வெற்றி வாரம் | 2317 |

**அத கோடிபதி** DLB


| | |
|---|---|
| திகதி | 22.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 11 26 45 61 |
| வெற்றி வாரம் | 2967 |

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு!

அம்பாறை,ஏப்.23

கோழிக்கடையைச் சுத்தம் செய்த குடும்பஸ்தர், மின்சாரம் தாக்கி, உயிரிழந்தார். இந்தச் சம்பவம் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்கம்பிட்டி வீதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானவரை, அயலவர்கள் உடனடியாக மீட்டு சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மலையடிக்கிராமம், 13ஆம் வீதியைச் சேர்ந்த கலந்தர் லெப்பை ரமீஸ் (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார். மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட அதிர்ச்சியால் மரணம் சம்பவித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-இ)

## ஆடை விற்பனை நிலையம் தீக்கிரை



கண்டி,ஏப்.23

கண்டி மெனிக்ஹின்ன நகரில் அமைந்துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட ஆடைகள் விற்பனை நிலையம் நேற்று அதிகாலைமுழுமையாகத் தீக்கிரையாகியுள்ளது. திடீரென மிக வேகமாகப் பரவிய தீயைக் கட்டுப்படுத்த முடியாதநிலையில், விற்பனை நிலையத்தில் இருந்த ஆடைகள் மற்றும் ஏனைய பொருள்கள் முழுமையாகத் தீக்கிரையாகியுள்ளன. எனினும், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என முதற்கட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தீயணைப்புப் படையினருடன் இணைந்து பிரதேச மக்களும் நீண்ட போராட்டத்தின் பின்னர் தீயை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மின் கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (க-இ)

## ‘அஸ்வெசும’ கொடுப்பனவு நேற்று முதல் விநியோகம்!

கொழும்பு, ஏப்.23

‘அஸ்வெசும’ நலத்திட்டத்தின்கீழ் ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவுகள் பயனாளர்களின் வங்கிக்கணக்குகளில் வைப்பிலிடும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

பண்டிகைக் கால செலவுகளைக் கருத்திற்கொண்டும், முதியோர்களின் நலன் சார்ந்தும் இந்த நிதியைத் தாமதமின்றி வழங்க அரசாங்கம் விசேட நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மாதக்கொடுப்பனவில் 70 வயதுக்கு மேற்பட்ட பயனாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இரண்டு கட்டங்களாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 70 வயதுக்கு மேற்பட்ட 617,406 பயனாளர்களுக்கு மொத்தமாக 3.087 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. அதே வயதுப் பிரிவைச் சேர்ந்த மேலும் 72,525 பயனாளர்களுக்கு 362.6 மில்லியன் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தகுதியுடைய பயனாளர்கள் தங்களது வங்கிக்கணக்குகளைச் சரிபார்த்து, உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (ஏ-இ)

# கயிறிழுத்தல் போட்டியில் மயங்கிய இளைஞர் சாவு!

கொழும்பு, ஏப்.23

புத்தாண்டு விழா ஒன்றில், தனது மனைவியுடன் இணைந்து போட்டிகளில் கலந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புத்தளம், கொஸ்வத்த பகுதியில் நடந்துள்ளது. சந்துன் தாரகா (வயது20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புத்தாண்டு விளையாட்டு நிகழ்வின் போது நடைபெற்ற ‘கயிறு இழுத்தல்’ போட்டியில் அவர் பங்கேற்றபோது அதிகப்படியான உடல் உழைப்பு மற்றும் களைப்பு காரணமாக, அவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு மரணத்துக்குக் காரணமென மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயங்கரவாத நிதி வழங்கலை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை

**கொழும்பு, ஏப்.23**

**பயங்கரவாதத்துக்கு நிதி வழங்குவதைத் தடுப்பதற்காக 'இலக்கு வைக்கப்பட்ட நிதித் தடைகளை' நடைமுறைப் படுத்துவது தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கை எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்தத் தடைகளின்கீழ், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அல்லது அதற்கு நிதி உதவி வழங்குவதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் அல்லது அமைப்புகளின் வங்கி கணக்குகள், சொத்துகள் மற்றும் ஏனைய சொத்து விவரங்களை முழுமையாக முடக்குவதற்குமுடியும். அந்தச் சொத்துகளைப் பயன்படுத்துதல், மாற்றுதல் அல்லது விற்பனை செய்தல் என்பன சட்டபூர்வமாகத் தடை செய்யப்படும்.

இந்த நடைமுறையானது, 1968ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஒழுங்குவிதியின் மூலம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1373 (2001) தீர்மானத்துக்கு இணங்க செயற்படுத்தப்படுகிறது.

தடைகளை விதிக்கும் அதிகாரம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் உள்ள அதேவேளை, அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 'தகுதியுள்ள அதிகாரியாக' நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நவீன சட்ட மற்றும் நிர்வாக நடைமுறையூடாக இலங்கையில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய பாதுகாப்பு மேலும் பலமடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தீவகக் கல்வி அலுவலகத்தில் கவனிப்பாரற்றுள்ள வாகனம்

யாழ்ப்பாணம், ஏப்.23

தீவகப் பாடசாலைகளைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகள் பயன்படுத்தும் ஹயஸ்ரக வாகனம், கடந்த நான்கு மாதங்களாக கவனிப்பாரற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தீவகப் பாடசாலைகளுக்கு வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் சென்றுவருவதற்கு இந்த வாகனம் பயன்பாட்டிலிருந்தது. எனினும், வாகனத்தின் ரயர்கள் சீரின்மை காரணமாக நான்கு மாதங்களாக, வலயக் கல்வி அலுவலகத்திலேயே வாகனம் தரித்து விடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் தொடர்புகொள்ளமுடியவில்லை. தொடர்ந்து வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த ஹயஸ்ரக வாகனம் பழுதடைந்தமை தொடர்பில் தமக்கு அறிக்கை எதுவும் இடப்படவில்லை என்று பதிலளித்தார். (க-66)

## போதைமாத்திரை கடத்தியவர் கைது

கொழும்பு, ஏப்.23

சுமார் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் மாதம்பே போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 216,000 போதைமாத்திரைகள் மீட்கப்பட் டுள்ளன. கற்பிட்டி, நுரைச்சோலையிலிருந்து கொழும்பு நோக்கி மரக்கறிகளை ஏற்றி வந்த லொறி ஒன்றில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பொலிஸ் விசாரணைகளின்படி, இந்தப் போதைமாத்திரைகள் இந்தியாவிலிருந்து படகுமூலம் இலங்கைக்கு கடத்தி வரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (எ-இ)

## அமைதி நடைபயணம் நேற்றுக்காலை ஆரம்பம்



கொழும்பு, ஏப்.23

உலக அமைதியை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் 'எஹி பஸ்ஸிகோ' அமைதிக்கான நடைபயணம், நேற்றுக் காலை தம்புள்ளை ரஜமகா விகாரை வளாகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. இந்த நடைபயணம் நாவுல, மாத்தளை, கண்டி, கடுகண்ணாவை, கேகாலை மற்றும் யக்கலை ஊடாகச் சென்று எதிர்வரும் 27ஆம் திகதி களனி ரஜமகா விகாரையை சென்றடையும். இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் விசேட அரச விழாவாக நடைபெறவுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வந்துள்ள பஞ்ஞாகர தேரர் தலைமையிலான சர்வதேச பௌத்த துறவிகள் குழுவினர் இந்த நடைபயணத்தை வழிநடத்துகின்றனர். அமெரிக்கப் பயணத்தில் அவர்களுடன் பயணித்த 'ஆலோகா' என்ற வளர்ப்பு நாயும் இலங்கைக்கு வந்து நடைபயணத்தில் பங்கேற்றுள்ளது. (எ-இ)

## பாடசாலைக்குச் செல்லாத 161 சிறார்கள் அடையாளம்

கொழும்பு,ஏப்.23

களுத்துறை மாவட்டத்தில் கடந்த வருடத்தில் பாடசாலைக்குச் செல்லாத 161 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகளவானோர் தொடங்கொட பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டச் செயலகத்தில், நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், மாவட்டச் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி சமர்ப்பித்த அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 42 சிறுவர்கள் மீண்டும் பாடசாலைகளுக்குத் திரும்பியுள்ளனர். அதேவேளை மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 12 பிரிவுகளில் 'பாடசாலை கண்காணிப்புக்குழுக்கள்' அமைக்கப்பட்டுள்ளன. எனினும் பேருவளை மற்றும் மத்துகம ஆகிய இரு பிரிவுகளில் மாத்திரம் இந்தக் குழுக்கள் இதுவரை அமைக்கப்படவில்லை என்றும் அதிகாரி சுட்டிக்காட்டினார். (க-இ)

## பழிபாவம் சும்மா விடாது!

பிச்சை எடுக்குதாம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்னுதாம் அனுமான் எண்டமாதிரி இல்லாதவையின்ர சொத்தை ஆட்டையைப் போட்டு அனுபவிக்க வெண்டே ஒரு கும்பல் எப்பவும் இருக்கத்தான் செய்யுது. அதோட அந்தக் கும்பலுக்கு அரசாங்கத்தின்ர ஆசிர்வாதமும் இருந்தால் அவையின்ர ஆட்டத்துக்கு அளவிருக்காது. அப்பிடி ஒருத்தர் கிளிநொச்சியில பெரும் ஆட்டம் போடுறார். அவரின்ர ஆட்டத்துக்கு அரசாங்கமும் தாளம் போட்டுக்கொண்டு இருக்குதாம்.

கிளிநொச்சிக் கனகாம்பிகைக் குளத்துக்குக் கிட்ட சிறுவர் இல்லமொண்டின்ர காணி இருக்குது. ஆனால் அந்தக் காணிக்குள்ள சிறுவர் இல்லம் இல்லை. அந்தச் சிறுவர் இல்லம் ஒரு சனசமூக நிலையக் காணியில தான் இப்ப இயங்கிக்கொண்டிருக்குது.சொந்தக் காணி இருந்தும் அகதி மாதிரி அந்தச் சிறுவர் இல்லம் இப்பிடிப் பிறத்தியாரின்ர காணிக்குள்ள ஒண்டிக்கொண்டிருக்கஎன்னகாரணம்? வேறயென்ன, அந்தக்காணியை 'குத்தகை' எண்டு எடுத்ததனியார் ஒருத்தர் ஆட்டையைப் போட்டிட்டார். சொப்பன சுந்தரியை இப்ப ஆர் வைச்சிருக்கினம்? எண்ட கதைமாதிரி, அந்தச் சிறுவர் இல்லக் காணியை ஆட்டையைப் போட்டவர் அப்பிடியே கை மாத்தி, கைமாத்தி இப்ப நாலாவது கைமாறி திசைகாட்டியில எலக்சன் கேட்ட ஒருத்தர் தான் அந்தக் காணியை வைச்சிருக்கிறார். அவர் இப்ப அந்தக் காணிக்குள்ள ஒரு கராஜ் கட்ட வெளிக்கிட்டிருக்கிறார். இப்பிடியே விட்டால் ஆள் காணியின்ர ஆட்சியை ஆயுள் முழுக்கப் பிடிச்சிடும் எண்டு, சிறுவர் இல்லக்காரர் பிரதேச செயலகத்திட்ட போய் முறையிட்டிருக்கினம். பொதுக்காணி சம்பந்தமான இந்த விசயத்தை பிரதேச செயலகக்காரர் முடிச்சு வைக்கிற அதிகாரம் இருக்கு. இப்பிடி ஒரு சிறுவர் இல்லக் காணியை அடாத்தாப் பிடிச்சு, அதுக்குள்ள கராஜ் கட்டவும் வெளிக்கிட்ட அந்தத் திசைகாட்டிக்காரரை கழுத்தைப் பிடிச்சு வெளியில தள்ளிப்போட்டு, அதில சிறுவர் இல்லத்தைக் கட்ட வைக்கவேண்டியது பிரதேச செயலகத்தின்ர பொறுப்பு. ஆனால் ஏதோ உள்ளுக்கால 'டீல்' நடந்திருக்குதுபோல. அவையள் பம்மிக்கொண்டு 'இதுக்கு நாங்கள் ஒண்டும் செய்யேலாது' எண்டு கையை விரிச்சிருக்கினமாம்.

பிரதேச செயலகம் மட்டுமில்லை, கரைச்சிப் பிரதேச சபையும் உந்த விசயத்தில திசைகாட்டிக்காரரோட பின் கதவு டீலிங்கிலதான் இருக்குது போல. ஏனெண்டால் அந்தத் திசைகாட்டிக்காரர் அடாத்தாப் பிடிச்சு வைச்சிருக்கிற சிறுவர் இல்லக்காணியில கராஜ் கட்டுறார் எல்லோ. அந்தக் கராஜுக்கு ஒரு அனுமதியும் அவர் எடுக்கேலை. இப்பிடி அனுமதியொண்டும் எடுக்காமல், திஸ்ஸ விகாரை மாதிரி சட்டவிரோதமாக் கராஜ் கட்டுறதை நிப்பாட்டி சட்டநடவடிக்கை எடுக்கவேண்டியது பிரதேசசபையின்ர வேலை. ஆனால் அவையும் எல்லாம் கண்ணுக்கு முன்னால நடந்தும் காணாதமாதிரி நடிக்கினம். இப்பிடி கரைச்சிப் பிரதேச செயலகமும், பிரதேசசபையும் அந்தக் காணிபிடிக்கிற திசைகாட்டிக்காரருக்கு சப்போர்ட் பண்ணுறதால அவர் அடிக்கிற கொட்டத்துக்கு அளவில்லாமல் போக, அந்தச் சிறுவர் இல்லப் பிள்ளையள் இரவல் காணிக்குள்ள அந்தரிச்சு வாழுற பாவம், பழியெல்லாம் மோசடிக்காரரைச் சும்மா விடுமெண்டு நினைக்கிறியளோ? மாற்றம் எண்டு சொல்லிக்கொண்டு வந்த திசைகாட்டிக்காரர், தங்கட கட்சிக்காரர் செய்யிற அநியாயங்களை கொஞ்சமெண்டாலும் தட்டிக்கேட்டால் குறைஞ்சோ போடுவியள்?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந் திருவிழா கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஐந்தாம் நாள் இரவு உற்சவம் நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க-100)

# பேருந்தின் இயந்திரக் கோளாறாலேயே பயணிகள் இடையே இறக்கப்பட்டனர்

## போக்குவரத்து அதிகாரசபை விளக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தனியார் பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே, பயணிகள் இடையே இறக்கப்பட்டனர் என்று வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்துப் பயணிகள் அதிகாரசபையின் தலைவர், பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்.நகரிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட தனியார் பேருந்தொன்று போதிய பயணிகளற்ற காரணத்தால், அரியாலைச் சந்தியில் 25 பயணிகளை இடைநடுவில் இறக்கி, அவர்களைப் அரச பேருந்தில் ஏற்றிவிட்டனர் என்று சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் வெளிவந்திருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் சூ.விமலேஸ்வரன்தெரிவித்துள்ளதாவது-

இதுதொடர்பில் அதிகாரசபை உடனடியாக துரித விசாரணைகளை முன்னெடுத்தது. அந்தத் தனியார் பேருந்தின் சாரதி, அதிகாரசபைக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

சாரதி சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் பயணிகளின் எண்ணிக்கைக் குறைவால், சேவையை வேண்டுமென்றே இடைநிறுத்தவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து யாழ்.பிரதான பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 40 பயணிகளுடன் சேவையை ஆரம்பித்துள்ளது. எனினும், அரியாலைப் பகுதியை அடைந்தபோது பேருந்தில் திடீர் இயந்திரக்கோளாறு ஏற்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வீதிப் போக்குவரத்துச் சட்ட நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு, சாரதி பேருந்தை உடனடியாக அரியாலையில் நிறுத்தியுள்ளார். அத்துடன், இதுதொடர்பாக பேருந்து நிலைய நேரக் கணிப்பாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளார். பயணிகளை நடுத்தெருவில் இறக்கிவிடக்கூடாது என்ற நேரக் கணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய, அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த கதிர்காமம் நோக்கிச் செல்லும் அரச பேருந்தில் பயணிகளைப் பாதுகாப்பாக மாற்றி ஏற்றியுள்ளார். குறித்த அரச பேருந்தில் ஆசனங்கள் இல்லாத காரணத்தால், ஒரேயொரு பயணி மாத்திரம் பயணிக்க மறுத்து, தரிப்பிடத்தில் காத்திருந்தார். ஏனையோர் அதில் பயணித்தனர் என்று சாரதி தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார். பேருந்தின் இயந்திரக் கோளாறு காரணமாகவே சேவை இடைநிறுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும்வகையில், மறுநாள் வவுனியாவில் உள்ள திருத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளுக்கான பற்றுச்சீட்டு ஆதாரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சமூக வலைத்தளங்களில் பரவப்பட்ட தகவலில் உண்மையில்லை- என்றார். (சு-66)

# நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஏப்.23


திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் நினைவாக கடந்த ஆண்டுமுதல் ஆரம்பிக்கப்பட்ட நினைவுப்பேருரையின் தொடர்ச்சியாக இரண்டாவது பேருரை நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'கத்தோலிக்கத் திருஅவையின் பார்வையில் பண்பாடும் கலை இலக்கியங்களும்' (இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்கள்) எனும் பொருளில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி தமிழ்நேசன் அடிகள் நினைவுப்பேருரையை வழங்கவுள்ளார். (எ-இ)

# சிங்களத் திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் ஒழுங்கமைப்பில், இந்த வாரம் 'சத் சமுதுற' சிங்களத் திரைப்படம் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளது. யாழ்.அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு திரைப்படம் காட்சிப்படுத்தப்படும். (க)



# அணைக்கட்டை அமைத்தால் சிறுபோகத்தை அதிகரிக்கலாம்

## பெரிய இத்திமடு விவசாயிகள் கோரிக்கை!

குருவிச்சை ஆற்றை மறித்து அணைக்கட்டொன்றை அமைப்பதன்மூலம், சிறுபோக நெற்செய்கையை அதிகளவில் மேற்கொள்ளமுடியும் என்று ஒட்டுசுட்டான், பெரிய இத்திமடு கமக்கார அமைப்பைச் சார்ந்த விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கோரிக்கை விடுத்தனர். அந்தப் பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், விவசாயிகளுடன் கலந்துரையாடினார். தற்போது பெரிய இத்திமடு குளத்தின்கீழ் 80 ஏக்கர் வரையில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. குருவிச்சை ஆற்றை மறித்து அணைக்கட்டு அமைக்கப்பட்டால் 120 தொடக்கம் 130 ஏக்கர் வரையில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளமுடியும் என்று விவசாயிகள் சுட்டிக்காட்டினர். நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், உடனடியாக ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொலைபேசியில் உரையாடினார். விவசாயிகளின் அணைக்கட்டு அமைப்பது தொடர்பான கோரிக்கைத் தெரியப்படுத்தினார். தொடர்ந்து அணைக்கட்டு அமைப்பது தொடர்பில் எழுத்துமூலமான கோரிக்கையை கையளிக்குமாறு விவசாயிகளிடம் கோரினார். (க-246)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமானநாள். மனதில்தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர்ப்பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத செலவுகளால் மன உளைச்சல் ஏற்படக்கூடும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மகரம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# புத்தாண்டில் நீர்க்கல்லறைகள்

சித்திரைப் புத்தாண்டு என்பது மகிழ்வின் காலமாகும். ஆனால், இம்முறை இலங்கையில் ஏப்ரல் 10 முதல் 18 வரையிலான ஒரு வார காலப்பகுதியில் மட்டும் நீரில் மூழ்கி 27 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தி, அந்த மகிழ்வின் மீது கறுப்புத் திரையைப் போர்த்தியுள்ளது. கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இம்முறை மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வழக்கத்துக்கு மாறான கடும் வெப்பம் காரணமாகவும், விடுமுறை நாள்களைக் கழிக்கவும் மக்கள் ஆறுகள், குளங்கள் மற்றும் கடற்பகுதிகளுக்கு அதிகளவில் சென்றதே இத்தகைய விபத்துகளுக்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. தகிக்கும் வெயிலிலிருந்து தப்பிக்க நீரினைத் தேடிச் சென்றவர்கள், அங்கு மறைந்திருந்த மரணத்தை உணராமல் போனது ஒரு பெரும் சோகமாகும்.

இந்த அதிகரித்த மரணங்களுக்குப் பின்னால் சில கசப்பான உண்மைகள் உள்ளன. புத்தாண்டு விருந்துகளில் மது அருந்திவிட்டு, தன்னிலை மறந்து நீர்நிலைகளில் குதிப்பதே இத்தகைய அசம்பாவிதங்களுக்கு முக்கியமான காரணம். மதுவினால் ஏற்படும் போதை, நீரின் ஆழத்தையும் வேகத்தையும் சரியாகக் கணிக்கவிடாமல் மூளையை மழுங்கச் செய்கிறது. மேலும், தங்களுக்குப் பழக்கமில்லாத, ஆபத்தான ஆழங்களைக் கொண்ட புதிய நீர்நிலைகளில் முன்னெச்சரிக்கையின்றி இறங்குவதும், நீச்சலில் அதீத தன்னம்பிக்கை கொண்டு ஆழமான பகுதிகளுக்குச் செல்வதும் எமனைத் தேடிச் செல்வதற்குச் சமமாகும். குறிப்பாக, சுழிகள் மற்றும் சேறு நிறைந்த பகுதிகளில் இறங்குவது எத்தகைய சிறந்த நீச்சல் வீரரையும் நிலைகுலையச் செய்துவிடும்.

இனிவரும் காலங்களில் இத்தகைய உயிர்ப்பலிகளைத் தடுக்கவேண்டுமானால், வெறும் விழிப்புணர்வுப்பலகைகள் மட்டும் போதாது. பொதுமக்கள் தங்களுக்குப் பழக்கமில்லாத நீர்நிலைகளில் இறங்குவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக,'அபாய வலயம்' என எச்சரிக்கப்பட்ட இடங்களில் வேடிக்கை பார்ப்பதும்கூட ஆபத்தானது. சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் நீர்நிலைகளுக்குச் செல்லும்போது பெரியவர்களின் நேரடிக் கண்காணிப்பு மிக அவசியமாகும். மேலும், மது அருந்திவிட்டு நீர்நிலைகளுக்கு அருகில் செல்வதை ஒரு சமூகக் குற்றமாகக் கருதி அனைவரும் தவிர்க்க வேண்டும். நீர்நிலைகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் உயிர்காப்பு அங்கிகளை வெறுமனே அடையாளப் பொருளாக நினைத்து அலட்சியப்படுத்தாமல் அவற்றைக் கட்டாயமாக அணிந்து பாதுகாப்பு அரணாகக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு மரணமும் ஒரு குடும்பத்தின் கனவைச் சிதைக்கிறது. 27 உயிர்கள் என்பது வெறும் புள்ளிவிவரம் அல்ல; அவை 27 குடும்பங்களின் வாழ்நாள் ஆறாத வடுக்கள். இயற்கையோடு இணைந்து கொண்டாட்டங்களை முன்னெடுக்கும் போது, அதன் ஆபத்துகளையும் உணர்ந்து செயற்படுவதே உண்மையான விவேகம். அதிகார வர்க்கம் சுற்றுலாத்தலங்களில் உயிர்காப்புப் படையினரை அதிகப்படுத்தவேண்டிய அதேவேளை, பொதுமக்களாகிய நாமும் நீர்நிலைகள் குறித்து முன்னெச்சரிக்கையோடும், அவதானத்தோடும் இருந்தால் மாத்திரமே இனிவரும் புத்தாண்டுகள் நீர்க்கல்லறைகளாக மாறாமல், உண்மையான வசந்த காலங்களாக அமையும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**

**பொருள்:** இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.




## எரிபொருள் மற்றும் மின்சாரத்தை தடையின்றி வழங்குவதே இலக்கு!



### புதிய எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23
மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகத்தை எவ்விதத் தடையுமின்றித் தொடர்ச்சியாக வழங்குவதே அரசாங்கத்தின் முதன்மை இலக்கு எனப் புதிய எரிசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். அமைச்சர் குமார ஜெயக்கொடியின் பதவி விலகலைத் தொடர்ந்து அமைச்சராகப் பொறுப்பேற்ற அவர், தற்போதைய சூழலில் மின்வெட்டை நடைமுறைப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. தேசிய எரிசக்திக் கொள்கையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படாது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## இலங்கையில் இந்திய போர்க்கப்பல்

கொழும்பு, ஏப்.23
இந்தியக் கடற்படையின் 'INS NIREEKSHAK' போர்க்கப்பல் நேற்றமுன்தினம் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. கடற்படை மரபுகளின்படி இலங்கை கடற்படையினர் அந்தக் கப்பலை வரவேற்றனர். போர்க்கப்பல் தீவில் தங்கியிருக்கும் போது, அதன் குழுவினர் இலங்கைக் கடற்படையுடன் இணைந்து பயிற்சிகளை நடத்துவார்கள். இது இரு நாடுகளின் சுழியோடி துறைகளுக்கு இடையே அனுபவப் பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு வாய்ப்பை வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தங்க விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.23
ஈரானுடனான போர் நிறுத்தத்தை அமெரிக்கா நீடித்ததைத் தொடர்ந்து, கச்சா எண்ணெய் விலை குறைந்ததாலும், பணவீக்கம் மற்றும் வட்டி விகித அதிகரிப்புத் தொடர்பான அச்சம் தணிந்ததாலும் நேற்றுத் தங்கத்தின் விலை உயர்வடைந்துள்ளது. சர்வதேசச் சந்தையில் ஸ்பொட் தங்கம் 0.9 சதவீதம் உயர்ந்து ஒரு அவுன்ஸ் 4,755.11 டொலராகப் பதிவாகியுள்ளது. முன்னதாக நேற்றுமுன்தினம் ஏப்ரல் 13 ஆம் திகதிக்குப் பின்னரான மிகக்குறைந்த விலையைத் தங்கம் எட்டியிருந்தது. இதேவேளை, ஜூன் மாத விநியோகத்துக்கான அமெரிக்க தங்க எதிர்கால விலை 1.1 சதவீதம் உயர்ந்து 4,772.90 டொலராகக் காணப்பட்டது. (எ-இ)

## விபத்தில் ஒருவர் சாவு!

கொழும்பு, ஏப்.23
மோட்டார் சைக்கிள் ஒன்று சொகுசு ஜீப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில், சியம்பலாண்டுவ, ஐந்தாம் மைல்கல் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சியம்பலாண்டுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## சுகாதார அமைச்சின் முன்னாள் அதிகாரி கைது

கொழும்பு, ஏப்.23
சுகாதார அமைச்சின் முன்னாள் தலைமைச் சட்ட அதிகாரி (ஓய்வு) ஒருவர், இலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் சட்ட அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில், சுகாதார அமைச்சுக்காகக் கட்டடம் ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுத்துள்ளார். அதன்போது இலஞ்சம் கோரியமை மற்றும் பெற்றுக் கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின்கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் பிற்பகல் கைதுசெய்யப்பட்ட அவர் எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

**நாளை**
வெள்ளக்கிழமை- சித்திரை 11
24.04.2026
சுபநேரம் : 06.00 – 07.30
ராகுகாலம் : 10.30 – 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




சிறுப்பிட்டி வடக்கு

# அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்

## புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் -2026

**மஹாகும்பாபிஷேகம்**
**23.04.2026**
**வியாழக்கிழமை**
**முற்பகல் 9.30 - 10.46 மணி**




வைரவப் பெருமான் அடியார்களே!

சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்டதும் எண்ணற்ற பல சிவாலயங்களைக் கொண்டு இந்துமா சமுத்திரத்தின் முத்து என விளங்கும் இலங்கை மாநகரின் வடபால் யாழ்ப்பாணம் எனும் மாவட்டத்தில் கற்றோரும், ஆன்றோரும், பக்திமான்களும், விரதனுஷ்டான பக்தர்களும் நன்மனம் படைத்த மக்களும் வாழும் செல்வச் சிறப்புக்களும், விவசாய நிலப்பரப்புக்களும் ஒன்று சேர்ந்து அமையப்பெற்ற சிறுப்பிட்டி வடக்கிலுள்ள மலையன் சீமா எனும் பதியில் அரசமர நிழலில் பன்னெடுங்காலமாக கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் இக பரசுகங்களை நல்கி அருள் புரிந்து வருகின்ற சாமுண்டாதேவி சமேத ஞான வைரவப்பெருமானுக்கும், விநாயகப்பெருமான், முருகப்பெருமான், நவக்கிரகதேவர்கள், நாகதம்பிரான் முதலாய தெய்வங்களுக்கும் நிகழும் மங்கலகரமான பராபவ வருஷம் சித்திரை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை காலை 9.34 முதல் 10.46 வரையான மிதுனலக்கினமும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேகம் நிகழ எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமான் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது.

### பிரதம குருவின் அருளாசிச் செய்தி



இப்பூவுலகிலே கண்கண்ட தெய்வமாக இருந்து சிறுப்பிட்டி வடக்கு மலையன் சீமா எனும் பதியில் இராஜவிருட்சமாகிய அரச மர நிழலில் இருந்து அருளாட்சி புரியும் காமுண்டா தேவி சமேத ஞான வைரவப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நவகுண்டங்களோடு கூடிய உத்தம மகாயாக கும்பாபிஷேக பெருவிழா நடைபெறுவது ஊர் மக்களுக்கும் சைவாபிமானிகளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை தருகிறது. கும்பாபிஷேகம் காணும் வைரவப்பெருமானின் எல்லாம் வல்ல திருவருளால் ஊர்மக்களுக்கும், வெளி நாடுகளில் வாழும், அன்பர்களுக்கும், திருப்பணிகளில் நிதியுதவி, சரீர உதவி, மதியுதவி வழங்கிய எல்லோருக்கும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வையும் இக பர சுகங்களையும் வழங்கவேண்டும். என பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்கி நிற்கிறோம்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொருபச்சிலை"

தமிழமுதக் குருமணி
சிவஸ்ரீ கந்த ஜெயராமக் குருக்கள் (கும்பாபிஷேக பிரதம குரு)

### தலைவரின் வாழ்த்துச் செய்தி

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவப் பெருமானின மகா கும்பாபிஷேகமானது அவனருளால் இனிதே நடைபெறுகின்றமையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். பரிபாலன சபை சார்பில் ஞானவைரவப் பெருமானின் தாள் பணிந்து நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது சிறுப்பிட்டி வடக்கு கிராமத்தின் காவல் தெய்வமாகவும், அடியவர்களின் துன்பதுயர்களைப் போக்கி வேண்டிய வரங்களை வழங்கும் ஞானக்கடவுளாகவும் விளங்கும் வைரவப் பெருமானின் ஆலயம் பக்தி உணர்வுடன் புதுப் பொலிவு பெற்றிருப்பதை கண்டு அகமகிழ்கின்றோம்.

ஆ.மகேந்திரன்
தலைவர்
ஆலய பரிபாலனசபை

### ஆலய நிர்மாணியின் வாழ்த்துச் செய்தி

சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டமையையிட்டு அக மகிழ்கின்றேன். எனது நிறுவனத்தின் மூலம் மேற் கொண்ட கட்டுமானப் பணிகளில் இதுவும் குறிப்பிடத் தக்கவொன்று. இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை தொழில் ரீதியான கடமைகளுக்கு அப்பால் ஒரு தெய்வீகப்பணியாக மனதிலிருத்தி மேற் கொண்டுள்ளேன். இன்று இவ் வாலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி யடைவதோடு, மேலும் இவ்வாலயம் சிறப்பாக வளர்ச்சியடைந்து அடியவர்களின் துன்பங்களைப் போக்கி அருள்பாலிக்க வேண்டுமென வைரவப பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

குமாரசாமி கோபிகிருஸ்ணா
பணிப்பாளர்
ருத்ரம் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் - உடுவில்

## கிரியகால நிகழ்வுகள்

**23.04.2026 வியாழக்கிழமை**

**காலை 5.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு சுத்திபுண்யாகவசனம் யாககாலபிரவேசம், 6ம் கால பூஜை, உபசாரஹோமம், திருமுறை பாராயணம் மகாபூர்ணாகுதி வேத ஸ்தோத்திரமங்கலவாத்திய சகிதம் கும்பங்கள் வீதிப்பிரகஷ்ணம் ஸ்தூபி அபிஷேகம், கும்பங்கள் உள்வீதி பிரதக்ஷ்ணம் மூலஸ்தான ஸ்தூபி அபிஷேகம் புஷ்பாஞ்சலி மூலாலய பிரவேசம் 9.34 மணிமுதல் 10.10 வரையான மிதுனலக்கின சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் தசமங்களதரிசனம், குருமார் அருளாசி, கௌரவிப்புக்கள் சம்பாவனை தொடர்ந்து திருக்கதவம் திறத்தல் விஷேட வழிபாடு மகா அபிஷேகம் விஷேட பூஜை மகேஸ்வர கும்பாபிஷேக திருவருட் பிரசாதம் வழங்கல்.**

**மாலை 5.00 மணி முதல் விசேட பூஜை வசந்த மண்டப பூஜை தொடர்ந்து வீதியுலாவரும் அரும்பெரும் காட்சி இடம்பெறும்.**

## குருமார் விபரங்கள்

**சர்வபோதகாச்சார்யார்**
"முத்தமிழ்க் குருமணி"
சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக்குருக்கள்
(கதிரைமலை சிவன் தேவஸ்தானம்
(சுன்னாகம்)

**ஆசியுரை வழங்கும் குருமணிகள்**
"ஆகம கிரியாதிலகம்" சிவஸ்ரீ.ந.சபாரத்தின குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்)
"ஆகமகலாநிதி" சிவஸ்ரீ.க.பாஸ்கரக்குருக்கள் (வண்ணை)
"சிவாகம கிரியாமணி" சிவஸ்ரீ.சாமி சோமசுந்தரக் குருக்கள் (புத்தூர்)
"வேதாகம கிரியா பூசணம்" சிவஸ்ரீ.பரம.சண்முகராஜக் குருக்கள் (கோவையாதீனம்)

**சர்வ சாதகாச்சார்யார்**
"சாதக கலாமணி, சாதக இளவல்"
சிவஸ்ரீ.ச.கௌரிசங்கர சிவாச்சார்யார்
(வடகோவை)
"சாதக கானவினோதன்"
சிவஸ்ரீ.க.ரிஷாங்கக் குருக்கள்
(சாவகச்சேரி)

**கிரியா போதகர்**
"சிவாச்சர்ய சுலக்ஷணா"
சிவஸ்ரீ.சிவா.பாலசுப்ரமணிய குருமணி
(தம்பாலை)

**முகூர்த்த நிர்ணயம்**
"ஜோதிட கலாப மணி"
தி.கெங்காதரக் குருக்கள்
(ஏவினை)

### பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்

**"தமிழமுதக் குருமணி, வேதாகம வித்தகர், கிரயாகலாபமணி"**
**சிவஸ்ரீ கந்த ஜெயராம சிவாச்சார்யார்**
**(வளலாய் சித்திவிநாயகர் தேவஸ்தானம்)**

**உபசாதகாசிரியர்கள்**
"சாதகரத்னா"
சிவஸ்ரீசு.கிரிதரக் குருக்கள்
(ஆவரங்கால்)
"சிவாச்சார்யசாது"
சிவஸ்ரீ.சபா ஸ்ரீசந்தனக்குருக்கள்
(கொக்குவில்)

**ஆலய ஸ்தானக்குரு**
"கிரிய அலங்கார மயூக"
சிவஸ்ரீ.செல்வகார்த்திப சர்மா
(இடைக்காடு)

**கிரியா நெறியாளகை**
சிவஸ்ரீ.ஜெ.அரவிந்த சர்மா
(தம்பாலை)

**யாகசம்ரசஷ்டகர்கள்**
சிவஸ்ரீ.நிறஞ்சன் சர்மா (பருத்தித்துறை)
சிவஸ்ரீ.ஹரேகிருஸ்ணசர்மா (கல்முனை)
பிரம்மஸ்ரீ.பூ.விபூஜித சர்மா (ஊரெழு)
பிரம்மஸ்ரீ.ஸ்ரீ.ஹரிமேனன் சர்மா (ஆவரங்கால்)
பிரம்மஸ்ரீ.க.ராஜன் சர்மா (கொழும்பு)
பிரம்மஸ்ரீ.பிரசாந் சர்மா (வவுனியா)
பிரம்மஸ்ரீ.பா.நிஷாகர சர்மா (கந்தரோடை)
பிரம்மஸ்ரீ.வினோஜன் சர்மா (திருநெல்வேலி)

**நவகுண்ட மூர்த்தியர்கள்**
"தேவி பூஜா துரந்தரர்" சிவஸ்ரீ.சபா.குகந்தனக் குருக்கள் (உத்தர புன்னைநகர்)
"ஆகம கலாநிதி" சிவஸ்ரீ.இ.கலாராசக் குருக்கள் (உரும்பிராய்)
"சிவாச்சார்யமணி" சிவஸ்ரீ.பால.கயிலைக்குருக்கள் (கல்வியங்காடு)
"சிவாச்சார்ய மணி" சிவஸ்ரீ.ச.உமாசுதக்குருக்கள் (சிறுப்பிட்டி)
"சிவாக இளம் சுடர்" சிவஸ்ரீ.பாலசெந்தூரக்குருக்கள் (கொழும்பு)
"வேதஞானமணி" சிவஸ்ரீ.ச.ரவிசாங்கரக்குருக்கள் (ஊரெழு)
"சிவபூஜா ரத்னம்" சிவஸ்ரீ.க.கேதீஸ்வரக் குருக்கள் (உரும்பிட்டி)
"அகோர சிவாச்சாரியார் வித்யா பூசணம்" சிவஸ்ரீ.க.ரமணீகரக்குருக்கள் (கொழும்பு)
"கிரியா மந்திர சுரபி" சிவஸ்ரீ .வை.கிருஸ்ணானந்தக் குருக்கள் (கும்பிளாவ்)
"குமார குருமணி" சிவஸ்ரீ.ச.பிரசன்னவதனக் குருக்கள் (தெல்லிப்பளை)

**வேதபாராயணம்**
"சிவாச்சார்ய பூஷணம்" சிவஸ்ரீ.சு.பிச்சாடனக் குருக்கள் (நீர்வேலி)
"கிரியாமந்திர சுரபி" சிவஸ்ரீ.மணிநாத ரிஷாந்தக்குருக்கள் (இருபாலை)

**சிறப்பு குருமணிகள்**
"சிவாகம கிரியாமணி"
சிவஸ்ரீ.யோகானந்தேஸ்வரக் குருக்கள்
(ஆவரங்கால்)
"கிரியாலங்கார ரத்னா
சிவஸ்ரீ.தி.கிருபாகரசர்மா
(ஆவரங்கால்)
"கணேச உபாசகர்"
சிவஸ்ரீ.ஜெகதீஸ்வரக்குருக்கள்
(வண்ணை)
"குமர குருமணி"
சிவஸ்ரீ.சுவாமிநாதக்குருக்கள்
(நீர்வேலி)

**ஆலய நிர்மாணம்**
ருத்ரம் இஞ்ஜினியறிங்
பிரைவேட் லிமிடெட் - உடுவில்

ஸ்தபதி S.மாரியப்பன்
சிற்பி A.நாகலிங்கம்
சிற்பி S.கார்த்தி
} மயிலாடுதுறை இந்தியா

வர்ண வேலை
கீதன் ஆர்ட்ஸ், இலக்சுமி கலையகம்
(தச்சந்தோப்பு,கைதடி)

**மங்கலவாத்தியம்**
சுதா குழுவினர்
(கல்வியங்காடு)

**சுவாமி அலங்காரம்**
சிவராஜா ஐயர்
(புத்தூர்)

**யாக அமைப்பு**
காந்தன் பந்தல்
(புத்தூர்)

**ஒலியமைப்பு**
ஞானவைரவர்
ஆலயம்

**ஒளியமைப்பு**
சன் லைற்றிங்
(புத்தூர் கிழக்கு)

குறிப்பு - கும்பாபிஷேக நிகழ்வுடன் 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தன்று 108 சங்காபிஷேகம் இடம்பெறும். வசந்த மண்டப பூஜைகள் தொடந்து சுவாமி வீதியுலா இடம்பெறும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தேவஸ்தான பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர்
தேவஸ்தானம்.

"யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை"

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
01.05.1962

மறைவு
22.04.2026

காரைநகரை பிறப்பிடமாகவும்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது அன்புக்கும் நட்புக்கும் உரிய

**நடனசபாபதிப்பிள்ளை ஸ்ரீ ஸ்கந்தராசா**

அவர்கள் (22.04.2026) புதன்கிழமை
காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த
துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர்களும்**
**ஊழியர்களும்**

**S.V.முருகேசு**
**154 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**S.V.M (Pvt) Ltd**
**122 Dam St, Colombo 12**


**S.V.என்ரபிரைஸ்**
**கரடிபோக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

(CR/47435) J-1

# மரண அறிவித்தல்

## நடன சபாபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா (கண்ணன்)

**(நியூ சிறிகண்ணன் ஸ்ரோஸ் - திருநெல்வேலி, NSK பழைய சோனகத்தெரு - கொழும்பு - 12, NSK சுப்பமாக்கற் - திருநெல்வேலி)**



மண்ணில்
01.05.1962

விண்ணில்
22.04.2026

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாக வும் கொண்ட நடன சபாபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் நேற்று (22.04.2026) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நடனசபாதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம் (கப்புத்தளை வர்த்தகர்) இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், பகீரதன் (NSK சுப்பமாக்கற் - திருநெல்வேலி), யாசோதரா (JS Family Mart - சுன்னாகம்), பிரதீபா (கண்ணன் ஸ்ரோஸ் - விஸ்வமடு, BSC அக்கடமி - விஸ்வமடு), கஜானன் (கண்ணன் களஞ்சியம் - திருநெல்வேலி, A/L மாணவன், புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஷாந்தினி (கணக்காளர் - கொழும்பு), சசிகரன் (பொறியியலாளர் - சுன்னாகம்), செந்தூர்க்கண்ணா (கண்ணன் ஸ்ரோஸ் - விஸ்வமடு) ஆகியோரின் மாமனாரும், நவலட்சுமி (லண்டன்), சர்வேஸ்வரி (கிளி/ வெள்ளவத்தை அருளாம்பிகை (ஆனந்தி ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - வவுனியா), இராசேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரி (யோகு), திருநெல்வேலி, தேவராசா (பாலன் - லண்டன் முன்னாள் எட்மெண்டன் - பாலாஜி சுப்பமாக்கற்), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), மகாலிங்கம் (கணக்காய்வாளர்), ஞானேஸ்வரன் மற்றும் துரைராசா (தேவன் - லண்டன்), சிவானந்தராசா (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), நவமலர் (லண்டன்), சிவசுப்பிரமணியம் (சிவாபிறதேஸ் மற்றும் மாப்பியன் மில் - மானிப்பாய்), சிவனேஸ்வரி (நவலக்சுமி - வவுனியா), சிவஞானம் (ஞானம் களஞ்சியம் - திருநெல்வேலி), சிவகௌரி, சிவமணி (மணியம் Co - வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், அஸ்வின், வருண், தருண், லக்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2026) வியாழக்கிழமை திருநெல்வேலி சந்தை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**


cs (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 02 . 1951

மறைவு 22 . 04 . 2026



### செல்லையா தியாகராசா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராசா அவர்கள் நேற்று (22.04.2026) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - வள்ளிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தனவதனி (வளவாளர் - ஆரம்பக் கல்வி வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்), பிரசாத் (ஆசிரியர் - யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), துஸ்யந்தன் (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), நிஷாந்தன் (ஆசிரியர் - யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேரின்பமூர்த்தி, சங்கீதா, கார்மேல் பபியோலா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கபிலா (ஆசிரியை, யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரினி, பேருதனன், கோஷஜன், ரதுணன், டிவியன், அக்ஷிகா, டபிஷேக், சாஜிரா, டரனித், ஆருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2026) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31650)A

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 05 . 1961

மறைவு 30 . 04 . 2020



### அமரர் சண்முகநாதன் சத்தியவரதன்
### (சந்திரன்)

ஆண்டுகள் ஆறு ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்வு
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமப்பா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளி விளக்கே...

"சத்தியகிரி"
செட்டி லேன், இணுவில் மேற்கு.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 31648) A

## எரிவாயு சிலிண்டர் பதுக்கியவர் கைது

கொழும்பு, ஏப்.23

சமையல் எரிவாயு இருப்புகளை பதுக்கிவைத்துவிட்டு, வாடிக்கையாளர்களிடம் எரிவாயு இல்லை எனப் பொய்க்கூறிய வர்த்தகருக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தச் சம்பவம் கண்டறியப்பட்டுள்ளது.

நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான சோதனைகள் நடத்தப்பட்டுவருகின்றன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## காணி
## விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.

தொடர்பு:- 077 6234 204

(CS 61283) A

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப் பெயர் மாற்றமும் ஆதன உபபிரிவிடலும்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 04, வேதவனப்பிள்ளையார் கோயில் வீதி, ஆதன இலக்கம் 37/ 3 (பழைய இலக்கம் 43/3) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேதவனம் பெண் செல்லாச்சி உ.கோ:- திருமதி.M.சபாரட்ணதேசிகர் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த நந்தகுமார் சஞ்சேயனும் பெண் தமிழினியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு, எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன உபபிரிவிடலுக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு வேதவனப்பிள்ளையார் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெகநாதனும் பெண் அழகரசி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு P.குகனேஸ்வரன் அவர்கள் முகதாவில் 2702 இலக்க 26.03.2016 ஆம் திகதியில் "எனது தாயாரின் தகப்பனாரின் முதுசம் எனவும் 20 ஆண்டு காலமாக எங்களின் ஆட்சியில் இருப்பதினாலும் இவ்வாதனத்திற்கு நாங்களே உரித்தாளர்" என்றும் வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்கள்.

பின்னர் இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த வாரித்தம்பி ஜெகநாதனும் பெண் அழகரசி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு P.குகனேஸ்வரன் அவர்கள் முகதாவில் 4056 இலக்க 22.11.2019 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலம் இவ் ஆதனத்தை அவ்வூரைச்சேர்ந்த நந்தகுமார் சஞ்சேயனுக்கும் பெண் தமிழினிக்கும் வழங்கியுள்ளார்கள்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை பகுதிக்கு உட்பட்ட 305 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட "ஆலடி வளவு" நிபர 10 உம் மேற்படி இறை "ஆயிலடி" நிபர 7 3/8 ஆக மொத்தம் நிபர 17 3/8 பதினேழுடன் எட்டில் மூன்று பரப்பு. இது 2019ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி நில அளவையாளர் K.ஆறுமுகம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 6163ம் இலக்க நில அளவைப் படத்தின்படி 1ம் 2ம் 3ம் துண்டுகளுக்கு விஸ்தீரணம் நிபர 15 குளி 3.16 இதில் 3ம் துண்டுக்கு நிபர 4 குளி 10.98 நான்கு பரப்பும் பத்து தசம் ஒன்பது எட்டு குளியும். இதற்கெல்லை

**கிழக்கு :** 2ம் துண்டு ஆறுமுகம் பாலச்சந்திரன் பெண் சந்திரோதயத்துக்கும் உரிய ஆதனமும் கரஞ்சி பெண் டக்சியாவுக்கும் உரிய ஆதனங்கள்.
**வடக்கு :** கந்தையா குமாரசாமிக்கும் மறுபேருக்கும் வேதவனப்பிள்ளையார் ஆலயமும் வீதியும்
**மேற்கு :** சுரேஸ் பெண் சுஜீவாவுக்கு உரிய ஆதனம்
**தெற்கு :** பாசுபதியார் முருகேசுவுக்கு உரிய ஆதனம்.

இவ்வெல்லைக்குட்பட்ட காணியும் பயிர்கள் அடங்கலும் அதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்

இவ்வாதன பெயர் மாற்றம் மற்றும் ஆதன உபபிரிவிடல் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபுர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி.**

(cs. 61287) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜடேஜாவின் சகலதுறை ஆட்டத்தால்

# லக்னோ சுப்பர் ஜெயின்ட்ஸை சுருட்டியது ராஜஸ்தான்!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில் ஜடேஜாவின் சகலதுறை ஆட்டம் கைகொடுக்க லக்னோவை வீழ்த்தியது ராஜஸ்தான்.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 20 ஒவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ஜடேஜா ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணிக்கு, முன்வரிசை வீரர்களான படோனி, பன்ட், மார்க்கம் மூவரும் ஓட்டமெதையும் பெறாமல் ஏமாற்றினார்கள். முடிவில் அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 40 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டது. (ம)

அல்லைப்பிட்டித் துப்பாக்கிச் சூடு

# விசாரணைகளைத் துரிதப்படுத்த பொலிஸாருக்கு மன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் வேலணை அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 வயதுச் சாரதி உயிரிழந்த விடயத்தில் விசாரணைகளை விரிவுபடுத்துமாறும், அது தொடர்பில் அறிக்கை வழங்குமாறும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய குற்ற விசாரணைப் பணியகத்துக்கு விசாரணைகள் மாற்றப்பட்டுள்ள நிலையில், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 வயதுச் சாரதி உயிரிழந்த விடயத்தில் விசாரணைகளை விரிவுபடுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

விசாரணைகளின் செல்நெறி தொடர்பான அறிக்கைளை வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்குமாறும் நீதிமன்றம் தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளது. மே மாதம் 22ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-26)

**கரம்பொன் சிறியபுஸ்பம் மகளிர் மகா வித்தியாலயம்**

**பழைய மாணவர் பொதுக்கூட்டம்**

எமது பாடசாலையின் 110வது ஆண்டின் நிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் 25.04.2026 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்- பழைய மாணவர் சங்கம்

(CS 31655) A

**யா/காரைநகர் இந்துக் கல்லூரி**

**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**

**24.04.2026**



எமது கல்லூரி அதிபர்

**திரு.அரியரத்தினம் ஜெகதீஸ்வரன்**

**SLPS-I, B.Ed, Sp.Trd (Sci), Dip.in.Sch.Mgt.**

**சேவை விபரம்**

- 05.10.1992- 31.03.1997
  - யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் (ஆசிரியர்)
- 01.04.1997 - 10.02.2010
  - யா/காரைநகர் இந்துக்கல்லூரி (ஆசிரியர்)
- 11.02.2010- 14.06.2010
  - யா/வட்டு மத்திய கல்லூரி (ஆசிரியர்)
- 15.06.2010 - 04.05.2014
  - யா/நவாலி சென்பீற்றேர்ஸ்.றோ.க.த.க பாடசாலை (அதிபர்)
- 05.05.2014 - 01.07.2015
  - யா/வலித்தூண்டல் றோ.க.த.க பாடசாலை (அதிபர்)
- 02.07.2015 - 05.12.2019
  - யா/பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை (அதிபர்)
- 06.12.2019 -23.04.2026
  - யா/காரைநகர் இந்துக்கல்லூரி (அதிபர்)

கல்விப்புலத்தில் 18 வருடங்கள் ஆசிரியராகவும் 16 வருடங்கள் அதிபராகவும் மொத்தம் 34 வருடங்கள் தனது கல்விச் சேவையை சிறப்பாக ஆற்றியமையையிட்டு இவரின் ஓய்வு காலம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes

கல்லூரிச் சமூகம்
யா/காரைநகர் இந்துக்கல்லூரி

(CS 61224) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 04.04.1945 — மறைவு 22.04.2026

### கதிரவேலு சற்குணம்

மானிப்பாய் வடக்கு உச்சியோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சற்குணம் அவர்கள் நேற்று (22.04.2026) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (பப்பா) அன்புக் கணவரும், கமலசேகரம், காலஞ்சென்ற சந்திரராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணபதி குமாரசாமி அவர்களின் மைத்துனரும், நீருஜா, சந்தியா, கபில்யா, அனந், அசானி ஆகியோரின் பெரிய தந்தையும், விஜிதரன், ஜெனிறேகன், விமலதாஸ், தர்சன், விஸ்ணுவேணி, ஜெனிதாஸ் ஆகியோரின் மாமனும், மற்றும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவபாதம் (அப்பன்), சிவயோகன் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 055 5506

(CS 31657) A

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.04.1939 — உதிர்வு 28.04.2012

**திருமதி செந்திவடிவேலு சிவரூபராணி (இந்திரா)**


திதி: ஸப்தமி (23.04.2026)

அன்பின் உறைவிடமாய் எம்மை
அன்போடு அனைத்து
நாங்கள் நலமோடு
வாழ வைத்த எங்கள்
அன்புத் தெய்வம் அம்மா
ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது

குடும்பத்தினர்.
மல்லியோடை, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(CS 61285)A

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 06.08.1940 — மறைவு 20.04.2026

அமரர்

**ஐயாத்துரை இராஜேந்திரம்**

எமது ஆலய தர்மகர்த்தா சபை
முன்னாள் உறுப்பினர் அமரர்
ஐயாத்துரை இராஜேந்திரம்
அவர்களின் ஆன்மா சாந்தியடைய
காமாட்சி அம்பாளைப்
பிரார்த்திப்பதுடன், அன்னாரின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
தர்மகர்த்தா சபை
ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)

(CS 31649)A





## போர்நிறுத்தம் நீடிப்பு

ஈரானுடனான போர் நிறுத்தத்தைக் காலவரையறை இன்றி நீடிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மத்தியஸ்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவரும் பாகிஸ்தானின் கோரிக்கைக்கு மதிப்பளித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு: 02.12.1961
இறப்பு: 22.04.2026





பிறப்பு: 16.10.2003
இறப்பு: 22.04.2026

### சீனிவாசகம் பரமேஸ்வரன் — பரமேஸ்வரன் கஜதீபன்

வீமன்காமம் தெல்லிப்பழையினை பிறப்பிடமாகவும் ஏழுகோவிலடி ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் பரமேஸ்வரன் அவர்களும் அவருடைய மகனாகிய ஏழுகோவிலடி ஏழாலையினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் கஜதீபன் அவர்களும் நேற்று (22.04.2026) புதன்கிழமை அகால மரணமடைந்தார்கள்.

அன்னார் (சீ.பரமேஸ்வரன்) காலஞ்சென்றவர்களான சீனிவலகம் - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வனும், பொன்னம்பலம் - தங்கமணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், தந்தையோடு உயிர் நீத்த கஜதீபன் மற்றும் வினித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசமூர்த்தி, அன்னலட்சுமி, செல்வி தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெயலட்சுமி, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழுகோவிலடி ஏழாலையில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (23.04.2026) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்கதக கடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அப்புத்துரை கனகலிங்கம் (மைத்துனர்)
076 4315 902

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 31656) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழர்...

நெடுந்தீவு இறங்குதுறை சீரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது:-
நெடுந்தீவில் ஆயிரத்து 400 குடும்பங்கள் வாழ்கின்றன. சுற்றுலாத்துறை மற்றும் மீன்பிடித்துறைக்கு இங்கு ஏராளமான இடம் உள்ளது. எனவே, நெடுந்தீவை அபிவிருத்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். நெடுந்தீவில் போக்குவரத்து பெரும் பிரச்சினையாக உள்ளது. போக்குவரத்துக் குறைபாடுகளால் பாடசாலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியாத சூழல் காணப்படுவதுடன், அரச அலுவலகங்கள் பிற்பகல் 3 மணியுடன் மூடப்படுகின்றன. போக்குவரத்துப் பிரச்சினையே நெடுந்தீவின் கழுத்தை நெரித்துள்ளது. எமது ஆட்சியில் நெடுந்தீவின் தலைவிதி மாறும். நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைச் சரி செய்வதற்கு விரைவில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
எமது அரசாங்கத்தில் இனவாதம் இல்லை. கொள்கை அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம். எனினும், வடக்கிலும், தெற்கிலும் உள்ள சில குழுக்கள் இனவாதம் பேசி அரசியல் நடத்துகின்றன. தெற்கில் தமிழர் விரோத அசுர அரசொன்று இருக்க வேண்டும் என்பதையே வடக்கில் தோல்வி அடைந்துள்ள கட்சிகள் விரும்புகின்றன. நாம் அவ்வாறு செயற்படமாட்டோம் - என்றார். (அ-ம-26)

## குறிகாட்டுவான்...

கப்பட்டன. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, 984 மில்லியன் ரூபா செலவில் இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 2027ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிக்குள் பணிகளை முழுமையாக நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ச.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ. றஜீவன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், வட மாகாணக் கடற்படைத் தளபதி, யாழ். மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர்கள், நெடுந்தீவு பிரதேசசபையின் தவிசாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-20-17-26)

## தமிழகத்தில்...

கள் நேற்றுமுன்தினம் வரை இடம்பெற்றன. நேற்றுமுன்தினமும், நேற்றும் அமைதிக்காலம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், இன்றையதினம் வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளன. தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இம்முறை நான்குமுனைப்போட்டிகொண்டதாக அமைந்துள்ளது. தி.மு.க. தலைமையிலான கூட்டணி, அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி, நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி ஆகியவற்றுக்கு இடையில் இம்முறை கடும் போட்டி நிலவும் என்று நம்பப்படுகின்றது. மே மாதம் 4ஆம் திகதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.
இம்முறை 'தேர்தலுக்குப் பின்னரான கூட்டணி' மூலமே தமிழகத்தில் ஆட்சி தீர்மானிக்கப்படும் என்று நிபுணர்கள் பலரும் கணித்துள்ளனர். தேவைப்படின் விஜயுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் ஏற்கனவே அறிவித்துள்ளன.
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான தாக்கம் இம்முறை ஈழத்திலும் கணிசமாக உணரப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சிக்கும், தமிழக வெற்றிக் கழகத்துக்கும், தி.மு.க.வுக்கும் ஆதரவாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இந்திய...

கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 14 பேருக்கும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.
கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 9ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிரான வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, அவர்கள் அனைவருக்கும் எதிராக பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட நான்குமாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-55)

## காணாமல்...

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தினர் தமிழர்களின் வாக்குகளையும் பெருவாரியாகப் பெற்றுக் கொண்டனர். எனவே, காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் உள்ளிட்ட, தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டிய கடப்பாடு தற்போதைய அரசாங்கத்துக்கு உள்ளது என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.
அத்துடன், தமிழர்களின் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும், சிங்கள மயமாக்கல் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் முன்வைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## ஈஸ்டர்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தில் இடம்பெறும் விசாரணைகளை நான் வரவேற்கின்றேன். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரி தற்போது சிறையில் உள்ளார். விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று, குற்றவாளிகள் அனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.
நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை நான் பாராட்டுகின்றேன். அதேநேரம், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள் மூலம் முழுமையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது. திட்டங்கள் மேலும் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## சாலேயின்...

சுரேஷ் சாலே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, சுரேஷ் சாலேயை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. மே மாதம் 20ஆம் திகதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (அ-ம)

## தனியார்...

நெடுந்தீவுக்கான தனியார் கடற்போக்குவரத்து மற்றும் உள்ளூர் தனியார் போக்குவரத்துச் சேவைகள் நாளை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
நெடுந்தீவில் நீண்டகாலமாக நிலவும் பல்வேறு குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி நாளை போராட்டம் இடம்பெறவுள்ள நிலையில், அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக போராட்ட ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (அ-ம-26-66)

## வடக்கை...

உள்ளதாவது:-
இலங்கையின் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களிலும், மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் இன்று உச்சபட்ச வெப்பநிலை நிலவும். மனித உடலால் உணரப்படும் வெப்பநிலைக் குறியீட்டின் எச்சரிக்கை மட்டம்வரை வெப்ப உயர்வு காணப்படும். எனவே, வெப்பத்தை எதிர்கொள்வதற்குப் பொதுமக்கள் போதிய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## மோ.சைக்கிள் -...

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த சிறீனிவாசன் பரமேஸ்வரன் (வயது-64), பரமேஸ்வரன் கஜதீபன் (வயது-23) என்பவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெறும் உறவினரைப் பார்ப்பதற்காக தந்தையும் மகனும் சென்றுள்ளனர். பின்னர் அங்கிருந்து வீடுதிரும்பியபோதே உரும்பிராய் சந்திப்பகுதியில் இந்தக் கோரவிபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார்சைக்கிளில் சென்ற தந்தையும் மகனும் சம்பவ இடத்தில் உயிரிழந்த நிலையில், அவர்களின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-66-17-20)

## பருத்தித்துறை...

வருகின்றனர். பருத்தித்துறை நகரில் அண்மைக்காலமாக போதைக் குழுக்களால் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று, பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினரும், பருத்தித்துறை நகரசபையும் கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கு அமையவே, விசேட கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவோர், தேவையற்ற வகையில் நகர்ப் பகுதியில் தங்கியிருப்போர் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## நெடுந்தீவுக்கு...

நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி, நெடுந்தீவுப் பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு நெடுந்தீவு தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம், ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம், சுற்றுலா வாகன உரிமையாளர்கள் சங்கம் என்பன தமது ஆதரவை அறிவித்துள்ளன. (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலிருந்து உள்ளூர் உற்பத்திகள் வெளிநாடுகளுக்கு நேரடி ஏற்றுமதி

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**கிளிநொச்சி,ஏப்.23**

**உள்ளூர் உற்பத்திப்பொருள்களை யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ், கிளிநொச்சியில் கச்சான் பிஸ்கட் அறிமுக நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாய உற்பத்திகளை வெறுமனே மூலப்பொருள்களாக விற்பனை செய்யாமல், இவ்வாறான பெறுமதி சேர் முடிவுப் பொருள்களாக மாற்றி விற்பனை செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. இவ்வாறான உள்ளூர் உற்பத்திப் பொருள்களை, சர்வதேச ஏற்றுமதித் தரத்துக்குப் பொதியிட்டு, வெளிநாடுகளுக்கு நேரடியாக அனுப்பமுடியும். விளைபொருள்களின் விலைத் தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயப் பருவகால நாள்காட்டியொன்று உருவாக்கப்படவேண்டியது மிகவும் அவசியம். இதற்கான தகவல் திரட்டுப் பொறிமுறையை ஏற்படுத்துவது தொடர்பில் பல் கலைக்கழகங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் எவ்வளவு உற்பத்தி செய்தாலும், அவற்றைக் கொள்வனவு செய்து இவ்வாறான பெறுமதி சேர் உற்பத்திப்பொருள்களாக மாற்றும் நிறுவனங்கள் தொடர்ச்சியாக இயங்குமாயின் விவசாயிகளின் பல பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும்- என்றார். (க-55)



# கிளிநொச்சியில் பிரதான வாய்க்கால்கள் தூர்வாரல்

கிளிநொச்சி,ஏப்.23

கிளிநொச்சி மாவட்டத்தில் பல தசாப்தங்களாகத் தூர்வாரப்படாமல், வெள்ளப்பேரிடர்களுக்குக் காரணமாக அமைந்த வாய்க்கால்களைத் தூர் வாரும் விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கனகாம்பிகைக்குளத்திலிருந்து கிளிநொச்சிக்குளம் வரையிலான 1.5 கிலோமீற்றர் நீளமான பிரதான வாய்க்கால் தற்போது தூர்வாரப்படுகின்றது. வடக்கு மாகாணசபையின் மீண்டெழும் நிதியிலிருந்து 5 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த வாய்க்கால் அண்ணளவாக 10 மீற்றர் அகலப்படுத்தப்பட்டு, தூர்வாரப்பட்டுவருகின்றது. இந்தப் பணிகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் கேட்டறிந்தனர். வாய்க்காலுக்குச் சொந்தமான ஒதுக்கப் பிரதேசத்தினுள் காணிகளை ஆக்கிரமித்துள்ள சிலரால், பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பொலிஸாரின் உதவியுடன் அந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, பணிகளை எவ்விதத் தடையுமின்றித் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டச் செயலருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (க-113,55)

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த பழைய மாணவிகளால் புதிய பேருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்விகற்று வெளியேறிய மாணவிகளே பேருந்தை வழங்கியுள்ளனர். (க)





# யாழ்.ஆயர் இல்லத்தில் ஈஸ்டர் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று 7 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளநிலையில், நாட்டின் அனைத்துத் தேவாலயங்களிலும் நேற்றுமுன்தினம் விசேட மத வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ். மறை மாவட்டத்தில், மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தலைமையில் யாழ்ப்பாண ஆயர் இல்ல சிற்றாலயமுன்றலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் சுடரேற்றப்பட்டு, அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.


நிகழ்வில் யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அஞ்சலி உரை நிகழ்த்தினார். நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (க20)


# மன்னாரில் தொழில் கண்காட்சி

மன்னார்,ஏப்.23

மன்னார் நகர பிரதேச செயலகம் ,மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்த வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சிக் கண்காட்சி, மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னார் நகர பிரதேச செயலர் கா.காந்தீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், திணைக்களத் தலைவர்கள், அரச மற்றும் தனியார் தொழில் வழங்குநர்கள், தொழிற்பயிற்சித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சியைத் தேடுகின்ற பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டனர். வேலைவாய்ப்புகள் மற்றும் தொழிற்பயிற்சிகளை தேடுகின்ற இளைஞர், யுவதிகளுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. (க-56)





# விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் கிளிநொச்சியில் கச்சான் பிஸ்கட் அறிமுகம்

கிளிநொச்சி,ஏப்.23

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட கச்சான் பிஸ்கட் அறிமுக நிகழ்வு, 2கே அக்ரோ புரொடக்ட்ஸ் லிமிடெட்' (2K Agro Products Ltd) நிறுவனத்தின் வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிறுவனம், தனது பங்குதாரர்களாக உள்ள 325 விவசாயிகளிடமிருந்தும், மேலதிகமாக 200 விவசாயிகளிடமிருந்தும் கச்சானைக் கொள்வனவு செய்து வருகின்றது. அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் கச்சானைப் பெறுமதி சேர் முடிவுப்பொருளாக மாற்றிச் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளது. இதன் ஓர் அங்கமாகவே 'கச்சான் பிஸ்கட்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கச்சான் பாகுவையும் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், கிளிநொச்சிப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சோதிலட்சுமி, பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் ராஜேஷ்கண்ணா மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர். (க-55)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org